بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 15/10/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ- أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்ட போது ஃபஜ்ர் தொழுகை தொழப்பட்டதாக அன்னார் ஷஹீதானது தொடர்பான சஹீஹ் புகாரியின் அறிவிப்பிலிருந்து தெரியவந்தது. ஆனால், சஹீஹ் புகாரியின் பிறிதோர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அதிகம் ரத்தம் வழிந்ததனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மயக்கம் வந்து விட்டது. அப்போது நான் மக்களோடு இணைந்து அன்னாரை சுமந்து சென்று வீட்டில் சேர்த்தேன். விடிந்ததும் அன்னாருக்கு சுய நினைவு வந்த போது, அன்னார் கேட்டதனால், 'மக்கள் தொழுதுவிட்டார்கள்' என்று கூறப்பட்டது. இதைக் கேட்ட அன்னார், 'எவர் தொழுகையை விட்டுவிட்டாரோ அவருக்கு இஸ்லாத்தில் எந்தப் பங்கும் இல்லை' என்று கூறினார்கள். பிறகு அன்னார் உளூ செய்து தொழுதார்கள். 'தபக்காத்தே குப்ரா' எனும் நூலிலும் இதே எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை வீட்டில் கொண்டு சேர்க்கப்பட்ட பிறகு, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் தொழவைத்தார்கள். அதில் அவர்கள் இரண்டு சிறிய சூராக்கள் ஓதியதாகக் கூறப்படுகிறது.

'தபக்காத்தே குப்ரா' எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் மக்களிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் கத்தியால் குத்தியவன் பற்றி கேட்டபோது, மக்கள் ஹஸ்ரத் முகைரா பின் ஷுஃபா (ரலி) அவர்களின் அடிமை அபூ லுஃலுஃவின் பெயரைக் கூறினார்கள். அவன் பிடிப்பட்ட போது அதே கத்தியால் தற்கொலை செய்து கொண்டான். அபூ லுஃலுஃ ஃபிரோஸ் தற்காலிக உத்வேகம் மற்றும் கோபத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் கொன்று விட்டான் என்பது வரலாற்றாசிரியர்கள் எடுத்துரைத்தவற்றிலிருந்து கிடைக்கப் பெறும் கருத்தாகும்.

வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்றின் முக்கியமான நூலான 'அல்பிதாயா வன் நிஹாயா' வில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையில் ஹரம்ஸான் மற்றும் ஜுஃபனா மீது கொள்ளப்பட்ட சந்தேகத்தின் விளைவாக, சில வரலாற்றசிரியர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையை, முறையாக தீட்டப்பட்ட ஒரு சதிதிட்டமாகவும் சூழ்ச்சியாகவும் கூறுகிறார்கள்.

மேலும், மதீனாவில் வாழ்ந்து வந்த வெளிப்படையான முஸ்லிம், ஈரானிய படைத்தளபதி ஹரம்ஸான் இதில் பங்கு வகித்ததாகக் கருதினார்கள்.

முஹம்மது ரிஸா சாஹிப் அவர்கள் தமது நூல் ‘சீரத் உமர் ஃபாரூக் (ரலி)’ வில் இவ்வாறு எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூஃபாவின் ஆளுநர் ஹஸ்ரத் முகைரா பின் ஷுஃபா (ரலி) அவர்களின் பரிந்துரையின் பேரில், தொழில் தெரிந்த அவர்களின் ஓர் அடிமை அபூ லுஃலுஃவுக்கு மதீனா வர அனுமதியளித்தார்கள். அவன் இரும்பு வேலை மற்றும் சித்திர வேலையில் கைதேர்ந்தவனாகவும் தச்சனாகவும் இருந்தான்.

ஹஸ்ரத் முகைரா (ரலி) அவர்கள் அவன் மீது மாதாந்திரம் 100 திர்ஹம் வரி நிர்ணயித்திருப்பதாக அந்த அடிமை முறையிட்டான். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த வரியை அவனது வேலை திறமைக்குப் பொருத்தமானதாகக் கூறிவிட்டார்கள். அதனால் அவன் கோபம் அடைந்து விட்டான். ஒருநாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காற்றால் செயல்படும் மாவு அரைக்கும் எந்திரம் தயாரித்துக் கொடுக்குமாறு கேட்டார்கள். இதற்கு அபூ லுஃலுஃ கோபம் மற்றும் விருப்பமின்மையின் நிலையில் மிரட்டல் விடுத்தவாறு, ‘நான் உங்களுக்காக எப்படிப்பட்ட மாவு அரைக்கும் எந்திரம் தயாரிப்பேன் என்றால், அதைப் பற்றி மக்கள் விவாதிப்பார்கள்’ என்று கூறினான்.

அவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீதாக்குவதற்கான உறுதியான எண்ணம் கொண்டு, நடுவில் கைப்பிடி இருக்கக்கூடிய, இருபக்கமும் கூர்மையான கத்தி ஒன்றைத் தயாரித்தான். அதில் விஷத்தைத் தேய்த்து ஈரானிய படைத்தளபதி ஹரம்ஸானுக்குக் காட்டினான். ஹரம்ஸான், ‘இதை வைத்து யாரைக் குத்தினாலும் அவர் கொல்லப்படுவார்’ என்ற கூறினார். ஹரம்ஸானை முஸ்லிம்கள் ‘துஸ்தர்’ எனும் இடத்தில் சிறைபிடித்து மதீனா அனுப்பி விட்டிருந்தார்கள். ஹரம்ஸான், தான் கொல்லப்பட்டு விடுவேனோ என்று அஞ்சி முஸ்லிம் ஆகியிருந்தார்.

‘தபக்காத் பின் சஃது’ எனும் நூலில் நாஃபிஃ அவர்களின் அறிவிப்புப்படி, எந்தக் கத்தியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீதாக்கப்பட்டதோ அந்தக் கத்தியை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹரம்ஸான் மற்றும் ஜுஃபனாவிடம் பார்த்தார்கள். ஆனால், தபரீயில் குறிப்பிடப்பட்டுள்ள ஸயீத் பின் முஸய்யிப் (ரலி) அவர்களின் அறிவுப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் (ரலி) அவர்கள் அந்தக் கத்தியைப் பார்த்தார்கள். அது அபூ லுஃலுஃ, ஹரம்ஸான் மற்றும் ஜுஃபனாவுக்கு நடுவில் விழுந்தது. இந்த விஷயம் ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்ததும் அவர்கள் தமது வாளால் இருவரையும் கொன்று விட்டார்கள்.

பிறிதோரிடத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹரம்ஸான் மீது வாள் வீசிய போது, அவர் ‘லா இலாஹ இல்லல்லாஹ்’ என்று கூறினார். ஜுஃபைனா மீது வாள் வீசிய போது, அவன் தன் கண்களுக்கு முன் சிலுவை அடையாளமிட்டான். இதற்குப் பிறகு அவர்கள் அபூ லுஃலுஃவின் மகளையும் கொன்று விட்டார்கள்.

இதே போன்று மற்றுமொரு வரலாற்றாசிரியர் டாக்டர் முஹம்மது ஹுஸைன் ஹைக்கல் அவர்கள் தமது நூலில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஈரானியர்கள், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளக்கூடிய தோல்வியைத் தழுவியதனால், தமது

உள்ளங்களில் பொதுவாக அரேபியர்களுக்கு எதிராகவும் குறிப்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எதிராகவும் வன்மம் மற்றும் காழ்ப்புணர்ச்சி உணர்வுகளை மறைத்து வைத்திருந்தார்கள்.

அபூ லுஃலுஃவுடைய (இந்தச்) செயல் மதீனாவிலிருந்த - அரேபியர்கள் அல்லாத - மார்க்கமற்ற, கோபம் மற்றும் பழிவாங்கும் எண்ணத்தால் நிறைந்திருந்த சிறிய குழுவைக் கொண்ட மக்களின் சூழ்ச்சியின் விளைவாக இருந்திருக்கலாம். ஒருவேளை அபூ லுஃலுஃ ஃபிரோஸ் தற்கொலை செய்து கொள்ளாமல் இருந்திருந்தால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகன்கள் இந்த சூழ்ச்சியின் திரையை அகற்றி அதன் ஆழம் வரை சென்றிருக்க முடியும். ஆனால், இறைநியதி இந்த சூழ்ச்சியைக் கண்டறிவதன் பால் வழிநடத்தியது.

எந்தக் கத்தியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்களோ அந்தக் கத்தி ஹரம்ஸான் மற்றும் ஜுஃபனாவிடம் இருந்ததாக, முஸ்லிம்களின் மத்தியில் அனைவரைவிடவும் நம்பிக்கைக்குரியவர்களான ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் (ரலி) அவர்களும் சாட்சி பகர்கிறார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த சூழ்ச்சிக்கு இலக்கானார்கள் என்பதில் எந்த ஐயத்திற்கும் இடமில்லை. எவ்வாறாயினும், ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் எடுத்த நடவடிக்கைக்கு சட்ட ரீதியாக அனுமதி இருக்கவில்லை. எந்த நபருக்கும் சுயமே பழிவாங்குவதற்காக எழுவதற்கோ, தனது உரிமையைத் தானே பெறுவதற்கோ அனுமதி கிடையாது. விவகாரங்களுக்குத் தீர்ப்பளிப்பதோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னாரின் கலீஃபாக்களுக்கும் வரையறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் மக்களுக்கு மத்தியில் நியாயமாகத் தீர்ப்பு வழங்கி வந்தார்கள். குற்றவாளிகளுக்கு எதிராகப் பழிவாங்குவதற்கான ஆணை பிறப்பித்து வந்தார்கள்.

இந்தக் கொலை, முறையாக திட்டமிடப்பட்ட ஒரு சதியாக இருப்பது ஒன்றும் கற்பனைக்கு அப்பாற்பட்டதல்ல. சில வரலாற்றாசிரியர்களின் ஆதாரங்கள் வலுவாக இருக்கின்றன. ஏனென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் இதே போன்ற ஒரு சதித்திட்டத்திற்கு இலக்கானார்கள். அதன் மூலம், இஸ்லாத்தின் அதிகரித்து வரும் முன்னேற்றம் மற்றும் வெற்றியைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் தமது பழிவாங்கும் நெருப்பைத் தணித்துக் கொள்வதற்காகவும் வெளிவகையிலான ஒரு சூழ்ச்சியின் கீழ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீதாக்கப்பட்டது என்ற ஐயத்திற்கு மேற்கொண்டு உறுதி ஏற்படுகிறது. அல்லாஹ்வே நன்கறிவான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் وَلَیُبَدِّلَنَّہُمۡ مِّنۡۢ بَعۡدِ خَوۡفِہِمۡ اَمۡنًا எனும் வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள்:

கலீஃபாக்கள் அச்சமடைந்த வகையில் எந்தவோர் இன்னலும் அவர்களுக்கு ஏற்படவில்லை. ஏற்பட்டிருந்தாலும் அல்லாஹ் அதை அமைதியாக மாற்றி விட்டிருந்தான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வே எனக்கு மதீனாவில் ஷஹீதாகும் நற்பேற்றை வழங்குவாயாக!' என்று தொடர்ச்சியாக துஆக்கள் செய்து வந்தார்கள். எனவே, அவர்கள் ஷஹீதான போது அவர்கள்

மீது அச்சமிகு நேரம் வந்தது; ஆனால், அல்லாஹ் அதை அகற்றவில்லை என்று எவ்வாறு கூறமுடியும்? அல்லாஹ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் துஆவை ஏற்றுக் கொண்டான். மேலும், எத்தகைய வழிவகைகளை ஏற்படுத்தி விட்டான் என்றால், அவற்றின் மூலமாக இஸ்லாத்தின் கண்ணியம் நிலைபெற்றிருந்தது. ஆக, மதீனா மீது எந்தவொரு வெளி படையும் தாக்குவதற்குப் பதிலாக உள்ளிருந்தே ஒரு தீயவன் எழுந்தான். அவன் அன்னாரை ஷஹீதாக்கி விட்டான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அடிமைகள் விடுதலை அடைதல் தொடர்பான இஸ்லாமிய போதனையை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதானதற்குக் காரணத்தை எடுத்துரைத்தார்கள்:

ஈட்டுத் தொகை எதுவும் பெறாமல் அடிமைகளை விடுவித்து விடுங்கள் என்ற கட்டளை இருந்தது. ஒருவேளை இவ்வாறும் செய்ய முடியவில்லை; ஓர் அடிமை ஈட்டுத் தொகை செலுத்துவதற்கும் ஆற்றல் கொண்டிருக்கவில்லை என்றால், அவர் தனது ஈட்டுத் தொகைக்கு கிஸ்துகளை (தவணைகளை) நிர்ணயிக்க வைக்கலாம்.

இப்படி ஒப்பந்தம் போட்டிருந்த ஓர் அடிமைதான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் கொன்றான். அன்னாரிடம் ஒரு வழக்கு வந்தது. அதாவது, ஒருவருடைய அடிமை அதிகம் சம்பாதித்து வந்தான். ஆனால், எஜமானருக்குக் குறைவாகக் கொடுத்து வந்தான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவன் தன் எஜமானருக்கு மூன்றரை அனா கொடுத்து வர வேண்டும் என்று நிர்ணயித்துவிட்டார்கள். தான் ஈரானியனாக இருப்பதால் தனக்கு எதிராக இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக அவன் நினைத்தான். கோபத்தில் அடுத்த நாளே கத்தியால் அன்னாரைத் தாக்கிவிட்டான். அந்தக் காயங்களின் விளைவாகவே அன்னார் ஷஹீதாகிவிட்டார்கள்.

இந்த வேதனை மிகுந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அது இஸ்லாத்தின் மீது இன்று வரை பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அது எப்படியென்றால், மரணம் எல்லா நேரமும் இணைந்திருக்கிறதுதான்; ஆனால், உடல் ஆற்றல்கள் வலுபெற்றிருக்கும் போது மரணம் குறித்து எண்ணப்படுவதில்லை. ஆனால், உடல் ஆற்றல்கள் வலுவிழந்து விட்டால், உடல் நலம் வீழ்ச்சியை நோக்கியிருந்தால், மக்களின் உள்ளம் தன்னாலேயே வருங்கால ஏற்பாடுகள் குறித்து சிந்திக்கத் தொடங்கிவிடுகிறது. அவர்கள் ஒருவர் மற்றவரோடு இதுபற்றி பேசுவதில்லைதான்; ஆயினும், தானாகவே எத்தகையவொரு சிந்தனை போக்கு உருவாகி விடுகிறதென்றால், அது வருங்கால ஏற்பாடுகள் குறித்து சிந்திக்கத் தூண்டுகிறது. இதனாலேயே இமாம் மரணித்து விடும் போது மக்கள் விழிப்படைகின்றனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உடல் ஆற்றல் வலுபெற்றிருந்தது. அன்னாருக்கு 63 வயது ஆகிவிட்டிருந்ததுதான்; ஆயினும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விரைவில் தம்மைவிட்டுப் பிரிந்துவிடுவார்கள் என்ற சிந்தனை சஹாபாவின் உள்ளத்தில் இருக்கவில்லை. இதனால் அவர்கள் வருங்கால ஏற்பாடுகள் குறித்து சற்றும் சிந்திக்காமல் இருந்தார்கள். தீடீரென்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வஃபாத் எனும் இன்னல் வந்து விட்டது. அப்பொழுது ஜமாஅத் வேறு ஓர் இமாமை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக

இருக்கவில்லை. அச்சமயம் ஆயத்தமாக இருக்காததன் விளைவு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் ஏற்பட வேண்டிய அந்த அன்பின் தொடர்பு மக்களுக்கு ஏற்படவில்லை. இதனால் இஸ்லாத்தின் நிலை மிகவும் இக்கட்டானதாகி விட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் காலத்தில் இன்னும் அதிகம் இக்கட்டானதாகி விட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் பார்வையில், பிற்காலத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் தொழுகையின் போது சிலரைப் பாதுகாப்பிற்காக நிர்ணயிப்பது தொடர்பாகவும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் ஏனைய முஸ்லிம்களும் தொழுகையில் மூழ்கியிருந்தார்கள். அப்போது ஒரு தீயவன் முன்னேறிச் சென்று கத்தியால் குத்திவிட்டான். முஸ்லிம்களில் பாதிபேர் பாதுகாப்பிற்காக நில்லுங்கள் என்பது திருக்குர்ஆனின் தெளிவான கட்டளையாகும். இது போர் நேரத்து விஷயம்தான்; எனினும், சிறிய குழப்பங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக சில மக்கள் தொழுகை நேரத்தில் நிற்க வைக்கப்பட்டால் இது ஆட்சேபனைக்குரிய விஷயமல்ல என்று இதன்மூலம் ஆதாரம் கொடுக்கலாம். இந்த சம்பவத்துக்குப் பிறகு சஹாபா எப்பொழுது தொழுதாலும் பாதுகாப்பிற்காகக் காவலுக்கான ஏற்பாடு செய்து வந்தார்கள்.

தேவையுடையவர்கள் மற்றும் ஏழைகளின் மீது செலவு செய்ததன் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வஃபாத்தின் போது, அன்னார் பொறுப்பில் **86,000** திர்ஹம் கடன் இருந்தது. வஃபா உல் வஃபா எனும் நூலில் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கும், கடன் செலுத்துவதற்காக தமது இல்லத்தை விற்று விடுமாறும் பனூ அத்தீ மற்றும் குறைஷியர்கள் தவிர வேறு யாரிடமும் உதவி கேட்கக்கூடாது என்றும் வழிகாட்டல் வழங்கினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஆவியா அவர்களுக்கு அந்த இல்லத்தை விற்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடனை செலுத்தினார்கள்.

இப்போது இந்தக் குறிப்பு மேற்கொண்டு தொடர்கிறது; இனி வருங்காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்!.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)**